
கார்த்திகை - மார்கழி
2019

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் - 05 எழுத்து -27




தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி

இருமாத கவிதை இதழ்

**NEENKALUM EZHUTHALAM**
**( Poetry Magazine)**

விலை 60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் 27

## நவம்பர் - டிசம்பர் 2019

**ஆசிரியர்**

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

## படைப்பாளிகள்

லலிதகோபன்
திருமலை சுந்தா
வையலான்
சூசை எட்வேட்
எம்.எஸ்.பாஹிரா
சி.கணேசமூர்த்தி
நீலாபாலன்
செ.ஞானராசா
கி.லோகேஸ்வரி
முல்லை வீரக்குட்டி
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
தமிழேந்திரன்
கே.எம்.ஏ.அஸீஸ்
யூட்பேக்மன்
ஜமால்தீன்
பி.ரீ.அஸீஸ்
சிவரமணி
வே.சசிகலா
ந.நித்தியா
திருமலையாள்
ஷெல்லிதாசன்
கா.தவபாலன்

மூலமும் பெயர்ப்பும் : சி.சிவசேகரம்
பத்திரிகைக் குறிப்பு : கே.எஸ்.சிவகுமாரன்

பதிவுகள்
நூல் அறிமுகம்
அட்டைப்படம் - ஓவியர் கே.சிறிதரன்

தொடர்புகளுக்கு
நீங்களும் எழுதலாம்
43/4, சணல் லேன்,
திருகோணமலை.
e.mail : n.ezhuthalam18@gmail.com
0778812912



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007 மார்ச் - ஏப்ரல்

# பிரதான பேசுபொருளாக (வேண்டிய) காலநிலை மாற்றம்

மனித வாழ்வு இயற்கையுடன் பின்னிப்பிணைந்துள்ளது. இயற்கையை ஒட்டியே மனிதன் வாழவேண்டியவனாகிறான். அவ்வியற்கையின் பருவ காலங்களுக்கேற்ப புவி தட்பவெட்ப நிலை மாறுவது இயல்பானது.

ஆனால் சமீப காலமாக கடும்மழை, கடுங்காற்று, புவிநடுக்கம், மண்சரிவு, கடும்வெப்பம், கடும்வரட்சி என்பன மக்கள் அன்றாட வாழ்வியலை மோசமாக பாதிக்குமளவிற்கு மிக உக்கிரமாக அதிகரித்து வருகின்றன.

இதற்குக் காரணம் புவி வெப்பமடைதல் அதிகரித்து வருவதாகும். மனித நடவடிக்கையின் விளைவான காபன் வாயு வெளியேற்ற அதிகரிப்பே புவி வெப்பமடைதலுக்கு வழி வகுக்கிறது.

இவற்றின் காரணமாக உடல் ரீதியான வியாதிகள், உளரீதியான பாதிப்பு, உணவு உற்பத்தி விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு, உள்கட்டமைப்புக்கள் அழிவதுடன் சமூக ரீதியான பாதிப்புக்களும் ஏற்படுகின்றன.

காபன் வெளியேற்ற அதிகரிப்பை கட்டுப்படுத்துவதனூடாக புவிவெப்பமடைதல் அதிகரிப்பதைத் தடுப்பதும், காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துவதும் உடனடி அவசரத்தேவையாகவுள்ளன. இது குறித்து விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், அதிகாரமட்டத்திலுள்ள அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள், புத்திஜீவிகள் தீவிர கவனஞ் செலுத்துவதோடு கூடவே கலை இலக்கியவாதிகளும் தம்மாலான பங்களிப்பை நல்கவேண்டும்.

பெரும்பாலும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதார நடடிக்கைகளுக்கு மேலாக பாதுகாப்பு (ஆயுத உற்பத்தி) நடவடிக்கைகள் காபன் வெளியேற்றத்தை அதிகரிக்கின்றன. இருந்த போதிலும் அமெரிக்கா இதனை மறுதலிப்பதோடு காலநிலை மாற்றங்கள் குறித்த ஏனைய நாடுகளின் நடவடிக்கை களுடன் ஒத்துழைக்க மறுப்பது வருத்தமளிக்கின்றது.

சங்ககாலத்திலிருந்தே கவிஞர்கள் இயற்கையை ஏற்றியும் போற்றியும் பாடியுள்ளனர்.

"திங்களைப் போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்
மாமழை போற்றுதும்" என சிலப்பதிகாரம் இயற்கையைப் போற்றுகிறது.

மகாகவி பாரதி
"இவ்வுலகம் இனியது
இதிலுள்ள வான் இனிமையுடைத்து
காற்றும் இனிது தீ இனிது நீர் இனிது
நிலம் இனிது
ஞாயிறு நன்று
திங்களும் நன்று
வானத்துச் சுடர்களெல்லாம்
மிக இனியன

கடல் இனிது
மலை இனிது
காடு இனிது "
என்று இயற்கையைப் பாடுகிறார். எனவே நாமும் இயற்கையை பேணி காலநிலை மாற்றம் குறித்து விழிப்புடன் இருப்போமாக.

தடைகளைத் தகர்த்து
தகவுகளைத் தேடி
அன்புடன் ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர்வு

தூரகிழக்கில் பறக்கும்
வடிவமற்றதோர்
புறவையினை
அகக்கூண்டுக்குள்
பிடித்துக்கொள்கிறேன்...

முடிவற்ற
பேரச்சமென
சூழ்கிறது வானம்
கூண்டினை...

வானம்
கூண்டினை உடைக்கும்
நாளொன்றில்
உதிர்ந்த இறகொன்று
நினைவின் திரியென...

சட்டென
பறந்து மறையும்
"மின்மினி" தரும்
இரவல் வெளிச்சத்தில்...

ஒற்றை திரியும்
அகவணக்க பாடலும்
ஓராயிரம் ஆத்மாக்களும்...

"திடீர்" மழையின்
துளிகளில் கசியும்
"கார்த்திகை இருபத்தேழின்"
நிராசைகளை
எந்த மொழியில்
இடம்பெயர்க்க...

- ரி. ஷஜித கோவன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் உன்னையும் ஊஞ்சலாட்டும்..!

தூக்கணாம் குருவியாய்
நானும் ஆகிப்போகிறேன்
அதன் கூட்டின் அழகில் மனதைப்
பறிகொடுத்தபடி...?

அதற்குள்ளே - நான் இப்போது
மனிதப் பறவையான
என் மனிதப் பறவையான
என் மனப் பறவையோடு...?

அருமையான தென்றற் காற்று
அற்புதமான ஊஞ்சலாட்டம்...

பரவச உணர்வுகள்
பறவை வெளியதில்...

நட்சத்திர வானம்
நிலா(த்) தேவதையின்
எழில்மிகும் தேர்ப்பவனி
மேலே...

சலசலக்கும் நீரோடைகள்
சங்கீதமிசைக்கும் நாணல்கள்
தோகை விரித்தாடும் மயில்கள்
துள்ளிக் குதிக்கும் மான்கள்
அருகே...

செல்கள் செதுக்கிய
செம்மண் கோபுரங்கள்
எவரையும் கவரும்
எகிப்தியப் பிரமிட்டுக்கள்
சற்றுத் தொலைவிலே...

இன்னும் எத்தனை எத்தனையோ
காட்சிகள்
என் கண்முன்னே...

மானிடனே-நீயும்
துயரங்களை இறக்கிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கணாங் குருவியாகப்
பாவனை செய்...

அதன் கூட்டுக்குள்ளே
நீயும் உனது
மனச் சிட்டை
உட் புகுத்தி
ஊஞ்சலாடு....

அப்போது
உலகம் உன்னையும்
என்னைப் போல்
ஊஞ்சலாட்டுமே

**- கன்னிமுத்து தமிழேந்திரன்,**
**பாண்டிருப்பு -**

# வெளியேறல்

வெளியில் நச்சு வாயு
பூச்சியினம் ஈசல்கள் போல

பயிர் பச்சையெல்லாம்
கறுப்பு கறுப்பாய் தெரிந்து
படர்ந்திருந்த சிலந்தி வலைகளில்
மானுட முண்டங்கள் உறுண்டு

நிலமெல்லாம் ஊர்வன
மிதிக்கவும் முடியாமல்
விஷஜந்துக்களின் ஆட்சி
துர்நாற்றமும் மூக்கில்

வெளியே வர முடியாமலும்
முடங்கி கிடக்க முடியாமலும்

**- திருமலை சுந்தா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெலாம்.... ஊழல்பேயே.....

ஊழலே... உலகம் சூழும்
ஊத்தையை ஒழிக்கநாளும்
ஏலவே பெருமுயற்சி
எடுத்தலைக்கண்டோம், ஆனால்
வாழ்வியல் அதுதானென்ற
வக்கிரம் நீச்சரித்துப்
பாழ்படுத்திடவே இங்கு
பயன் வெறும் பூஜ்யம்தான்.

அரசியல் தொடக்கம் தூய
ஆன்மீகம் வரைக்கும் ஊழல்
நரபலி எடுத்தாலென்ன?
நட்டாற்றில் விட்டாலென்ன?
குரல்வளை அறுத்தாலென்ன?
குடலினை எடுத்தாலென்ன?
தரம் கெட்டுப் போனாலும், இத்
தறுதலை மாறவில்லை.

வெளியிலே வேசம்,தூய
வெண்ணிற ஆடை மாற்றார்
பழிபாவம் எதற்குமஞ்சார்
பசுத்தோலில் புலியாய் மேயும்
கழிவறை நாற்றம் பெற்ற
கௌரவ கனவானாகி
உலவிடுவோர்கள் ஊழல்
உலப்பதில் மன்னர்கள்தான்.

நீதியில்... நிதிமேலாடும்
நேர்மையோ அதில்தள்ளாடும்
நாதியே இல்லார்க்கொன்று
நாணயம் உள்ளோர்க்கொன்று
பேதியாய்ப்போகும் நீதி
பிசகினைத் தட்டிக்கேட்டால்
மோதலே, மூழும் ஊழல்
மோகினிப் பேய்களாலே

தன்நிலை மறந்து மாற்றான்
தவறினை என்னவென்று
உன்னியே ஆய்வு செய்யும்
ஓணான்கள் திருந்தநாளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிய முயற்சி வீணே
பாழாகிப்போனால் இங்கு
உண்மையில் ஊழல்பேயை
ஒழிப்பது இயலுமோ..?

சாய்ந்தமருதூர்
கே.எம்.ஏ.அஸீஸ்

---

# அவதி

'சும்மா இரு'
மனதிற்கு
சொல்லிக் கொள்கிறேன்
ஆயினும்
ஒவ்வொரு பொழுதும்
கனத்தவைகளால்
நிறைந்து கொள்கிறது

ஒன்று முடிய ஒன்றாயும்
ஒன்றுக்குள் ஒன்றாயும்
இன்னும் பலவாயும்
அடுக்கியும் நெருக்கியும்
அவலப்படுத்துகின்றன.

நுழைந்த சுமைகள்
ஒன்றாய் திரண்டு
வெளிக்கிளம்பும்
பொழுதுகளில்
இதயம் சுக்கு நூறாகி....

இயற்கை வெற்றிடத்தை
அனுமதிப்பதில்லை
மனதும் கூடத்தான்

- வையவன் -

தனியிதழ் ஒன்றினை தபால் மூலம் பெற விரும்புவோர் 25/= பெறுமதியான மூன்று முத்திரைகளை (75/=) அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை எனும் ஓடம்

வாழ்க்கை சிலருக்கு
வசந்தத்தின் வானவில்
சிலருக்கு
முட்களின் படுக்கை

தலை விதிகள் குழம்பிப்போய்
தத்தளிக்கும்
மனிதர்கள் பலர்
விதியின் வினையால்
வாழ்க்கை விளையாட்டை
விளையாடத் தெரியாது
வியர்த்துப் போயிருக்கும் மனிதர் பலர்

கடவுள் தந்த வாழ்க்கையே
களிப்புக் கடலில் மிதக்காமல்
கடனுக்குத் தொலைத்துவிட்டு
துன்பச் சகதிக்குள்
தொலைந்து போயிருக்கிறோம்.

வாழ்க்கை முழுவதும்
பல சில்லறைச் சிறைக்குள்
சிக்குப்பட்டு
சுதந்திரத்தை தொலைத்து
சுக்கு நூறாகி விடுகிறோம்

கருவாகிப் பின் உயிராகி
பூமித்தட்டில்
புது அடி பதிக்கிறோம்
எழுந்து நடக்க முன்
வேலிகள் விலங்காகி விடுகின்றன

இங்கே
விழுந்து எழுந்து கற்க – யாரும்
விடுகிறார்களில்லை
பாசமெத்தை போட்டு – வெறும்
பதுமைகளாக்கி விடுகிறார்கள்

வரையும் கட்டி இழுக்கும்
வாலிப பருவத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டை விளையாடக்கூட
விலங்குகள் விடுவதாயில்லை
காரணங்கள் தெரியாமலே
கைகள் கட்டப்பட்டு விடுகின்றன

சாதியின் பெயரால்
சில சங்கறுப்புகளும்
கடவுளின் பெயரால் சில
கழுத்தறுப்புக்களும்
வாழ்க்கையின் அத்தியாயங்களாகி
அரிக்கத் தொடங்கிவிட்டன

ஒற்றை வாழ்க்கையின்
ஓராயிரம் பிரச்சினைகள்
வாழ்க்கையோடம் ஓடுவதற்கு வழியின்றி
ஓர் கட்டத்தில்
ஓய்ந்து விடுகின்றது.

-யூட் பேக்மன்-

## தெருக்குரல்

குறைசொல்லி வாழ்வது சுலபம்
– நெஞ்சில்
கறையின்றி வாழ்வதே கடினம்

●●●

கோயில் கட்டி சிலை வைத்து பூசை
செய்வார் யார்
மானிடர் இலா இடத்து

●●●

மனிதரிலாது வாழாதவை இரண்டு
ஒன்று நாய் மற்றது கடவுள்

நன்றி கொன்றார்க்கு அன்பு
காட்டலாமோ
வன்கண் பாராட்டாமையே சிறப்பு

●●●

– சூசை எட்வேட் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வு கிடைத்திடுமா?

காட்டுக்குள் கருநாகம்
கவனமாய்ப் படுக்கிறது
வீட்டுக்குள் நுழைந்து
வினைபல செய்து விட...

சொத்து செல்வத்தை
சூறையாடி ஏப்பமிட்டு
நத்தையாய் ஊர்ந்து
நடுநிசியில் கடையெரித்து
வித்தையாய்க் குடியிருப்பில்
வினைகளைத் தூவிவிட்டு
சத்தியம் தவறாத
சான்றோனாய் உருவெடுக்க...

இன்று நல்லோனாய்
இதயத்தில் இடம்பிடிக்க
நின்று நிகழ்ந்துவிட்ட
நீசக் கொடுமைகளை
சென்றதாய் மறந்து
செல்வாக்குரிமையினை
நன்றே பறித்தெடுத்து
நடித்து மீண்டுமொரு
இனப்பகை மூட்டிவிட....

எம்மை ஏமாற்றி
ஏங்கவிட்ட காலங்கள்
உண்மைப் பட்டியலாய்
உறங்குது கிடப்பில்
அமைதிப் போர்வையில்
அண்டிக் கொத்திடவே
மனிதப் போர்வையில்
மறைந்து திரிகிறது
ஆனால் நாமோ....

சண்டை சச்சரவில்
ஏச்சுப் பேச்சுக்களில்
புண்ணாக்கி நெஞ்சைப்
புல்லராய் உருவெடுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் நாடகத்தை
தேவைக்கு அரங்கேற்றி
ஒற்றுமையுணர்வுகளை
உதறித்தள்ளிவிட்டு
புற்றினுள் நுழைந்தால்
புதுவாழ்வு கிடைத்திடுமா

-மருதூர் ஜமால்தீன் -

××××××××××××××××××××××

## அழைப்புகள்

மனசின் தீவிர அழைப்புக்களில்
மாநிலத்தின் மகத்தான பக்கம்
மேன்மையுடன் கரமிணையும்.
மனிதத்தின் நிஜங்கள்
உண்மையான முகத்தோடு.
உன் மூச்சினையும்.
கண்ணியத்தின் சாட்சியங்களோடு!

மனவிசாரிப்பு கரிசனையில்
பிறர் நலன் பேணலின் பிரியங்கள்.
மனித சிந்தனை வளர்ச்சிக் கோட்பாடென.
இதயம் பேசும் சமத்துவ கீதமாகிறது.

சம்பிரதாய சாஸ்திரங்களால்
பகுத்தறிவு வாதம் பலமிழக்கப்படுதலுறுதி.
அறியாமை வடுக்களையும்
முன்னேற்றத் தடுப்புகளையும்
அகற்றிடும் அகவெளி ஆற்றல்கள்!
வரவேற்கக் காத்திருக்கும்
சமரசப்பாடல்கள்!

வையகம் வேண்டும் வைகறைத்
தேடலுக்கு.
மானசீக தேச உணர்வோடு.
மனித உரிமைக்கு மதிப்பளிக்கும் மடல்
வாழ்வுக் கவிதைக்கு வளம் சேர்க்கிறது.

எம்.எஸ்.பாஹிறா, - பதுளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் அறிந்த ரகசியம்

அலைகளை இந்தச்
சிறுகைகளுக்குள் அள்ளிவந்து
பட்ட கறைகளைத்
துடைக்க முடியுமா?.....

இது காய்ந்து போன தடங்கள்,
எத்தனை கடல்
உயர்ந்து எழுந்து வந்து கழுவினாலும்.....
சுத்தப்படுத்த முடியாத தடயங்கள்.

ஓலைகள் உடுத்திய கிடுகுவேலிகளின்
அம்மணங்கள்,
ஆசைகளைக் கொதுப்பி
அணிந்து வாழ்வை ஆரம்பித்த
கூறைச் சேலைகளின் சாம்பல்கள்

நெஞ்சிலும்.....
நிசத்திலும்.....
மூண்ட நெருப்போடு
எல்லோருக்குந்தான்
பருப்புகள் தின்றோம்.

எல்லாவற்றையும் வானம் அறியும்.
இருட்டில் வேவுபார்த்த
வெள்ளிகளுக்குத் தெரியும்.

பெரிய சங்கீதக் கச்சேரிகளாலும்...
'ஜனசமூக' காட்சிப்படுத்தல்களாலும்
நினைவின் பதிவுகள் அழிந்துவிடாது.

தடங்கள் தடங்கள்தான்...
தடயங்கள்..... தடயங்கள்தான்.....

வெடிச்சத்தம் கேட்டு
இடம் மாறி... இடம் மாறி...
பதுங்குகுழி தேடி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடம் மாறி...
தடுமாறி...

சத்தங்களின்றி
கரியாகவும்...
கை காலின்றியும்...
முடிந்து போன
மனித உருபுகள்....
மனித அழிவுகள்,...
வரலாற்றில் உள்வாங்கப் படுவதில்லை.
அப்படி உள்ளேபோய்ச் சேரவும்
நாங்கள் விடுவதில்லை.

உண்மைகளை யெல்லாம்
பைல் கோப்புகளுக்குள் திணித்துவிட்டு
உதடு கொதுப்பிய புன்முறுவலோடு
எதையும் எதிர்கொள்வோம்

எங்கிருக்கிறது மனிதம்?

ஆடி முடித்த அழுக்குகளைக்
கழுவாமலேயே
அடுத்த ஆட்டங்களுக்குத்
தயாராகி விட்டது அணி,

வாழ்க்கையில்
இதுவெல்லாம் சகசமப்பா...

-கவிமணி நீலாபாலன்-


கவிதைக்கான
பயில்களம்
பரிசோதனைக்களம்
காத்திரத்தின் களம்
கருத்தாடற் களம்
விளக்கக் களம்
விமர்சனக் களம்
} நீங்களும் எழுதலாம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரிகாரங்கள்

சில்லறைகளின்
சிணுங்கல்கள்
காகிதங்களின்
கதகதப்பை அறியா.....!

விரல் இடுக்கில்
சிக்கிக் கொண்ட
பேனை முனை
பிரபஞ்சமாகும் பிரளயம்.....!

மன்மதனின்
அகோரப்பசிக்கு
விருந்தாகும்
மலரா மொட்டுக்கள்.....!

உமிழ் நீர்
ஒன்றிணைந்து
சர்வதேச குடிநீர் தினம்
கொண்டாட முயற்சி.....!

கௌரவ பதவிகளும்
கழுத்தறுக்கும்
பணியாமையை
அணியாமையால்.....!

விதைகளும்
விழும் இடத்தில்
விழுந்தால் தான்
விருட்சம்.....!

செல்வி. சசிகலா வேலாயுதம்
(வரோதயநகர் - திருமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம்

## இளங்கோவடிகளின்
## கவித்திறன் (ஆய்வு)

ஆசிரியர் : பெரியஐங்கரன்
முகவரி : புலோலிதெற்கு, புலோலி
விலை : 400/=



ஐந்து கவிதை நூல்களைத் தந்து நவீன தமிழ்க் கவிதையுலகில் தடம் பதித்த கவிஞர் பெரிய ஐங்கரன் கந்தபுராணம், பெரியபுராணம், சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களிலும் மிகுந்த ஈடுபாடுடையவர். அந்த வகையில் இளங்கோவடிகளின் கவித்திறன் பற்றிய இவ் ஆய்வு இளங்கோவடிகளின் மானிடம் தழுவிய பரந்த சிந்தனையை அழகாக படம் பிடித்துக் காட்டுகிறது.


“சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்று பிணக்குற்றுக்கிடந்த தமிழகத்தை முதன் முதலில் ஐக்கியப்படுத்திச் சிந்தித்தவன் இளங்கோ” என பின்னட்டைக் குறிப்பில் ஐஸ்வர்யா குறிப்பிடுகிறார்.

இளங்கோவின் சிந்தனைத் திறத்தின் வீரியத்தினை ஓரிரு சொற்களைக் கொண்டு விளக்கும் புதிய ஆய்வு உத்தியைக் கையாளுகிறார். அவ்வகையில் ஞாயிறு, திங்கள், மழை ஆகிய சொற்கள் இளங்கோவை இனங்காட்டும் முறைமையை இந்நூலினூடாக வெளிக் கொணர்ந்திருக்கும் பெரிய ஐங்கரனின் இம்முயற்சி தமிழுக்கு புதிய வரவாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்குகிற தெனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லூறின் வானம்

(கவிதைகள்)
ஆசிரியர் : கவிஞர் மருதூர் ஜமால்தீன்
முகவரி : 116,K.P. புதிய வீதி, ஏறாவூர்,
விலை : 100/=




தடயங்கள் கவிதைத் தொகுதி தொடங்கி ரமழான் ஸலவாத் கிழக்கின் பெருவெள்ளக் காவியம் முஹம்மது (ஸல்) புகழ்மாலை, இஸ்லாமிய கீதங்கள், தாலாட்டு, புதர் யுத்தம், வலிகள் சுமந்த தேசம், தீநிலம் என ஒன்பது நூல்களைத் தந்த மருதூர் ஜமால்தீனின் பத்தாவது படைப்பாக வல்லூறின் வானம் விளங்குகிறது.

"இறை சிந்தனையில் இலங்கும் கவிஞர் சமூகப் பிரச்சினைகளைக் கண்டு, சங்கடங்கள் கொண்டு உள்ளக் கிடக்கைகளைக் கொட்டி, சமூக விழிப்புணர்வைத் தட்டி அநியாயங்களை அத்துமீறல்களை, அரசியல் நாடகங்களை குத்தீட்டியாய் வரிகளை வடிவமைத்திருக்கிறார். என பின்னட்டையில் கவிஞர் ஏரூர் கே.நௌசாத் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.

"எத்தனை பாடங்கள் இந்நாடு கண்டும்
எத்தரின் கரமிங்கு நீண்டு நின்றால்
புத்திபெறு சமுதாய நலன்கள் நாட்டில்
புன்னகையுடன் புதைகுழி சென்று மறையும்"

மரபும் நவீனமும் கைவரப்பெற்ற கவிஞர் விடயப்பரப்புகள் விரிவுபெறின் இன்னுஞ் சிறந்த படைப்புக்களை இவரிடமிருந்து எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பதிவுகள்

# பௌர்ணமி நிகழ்வு – 12.11.2019

**கலாநிதி கனகசபாபதி சரவணபவனின் 12 நூல்கள் அறிமுகம்.**

**எஸ். ஆர். தனபாலசிங்கத்தின் தலைமையில் T.D.D.A மண்டபத்தில் நடைபெற்றபோது ஜேர்மன் – தமிழ் பேரகராதியினை ஓய்வு நிலை நகராட்சி மன்றச் செயலாளர் திரு.ஜோதிலிங்கம் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொள்வதையும் 'குளக்கோட்டன் சமூகம்' எனும் நூலினை எழுத்தாளர் கந்தவனம் கோணேஸ்வரன் பெற்றுக் கொள்வதையும் நீதிமன்றப் பதிவாளரும் விமர்சகருமான எஸ்.எம்.எஸ்.நியாஸ் நூல்கள் பற்றி கருத்துரைப்பதும் உடல் நலமும் உடற்பயிற்சியும் என்னும் தலைப்பில் Dr.அ.ஸதீஸ்குமார் உரையாற்றுவதையும் முறையே படங்களில் காணலாம்.**













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீங்களும் எழுதலாம் - இதழ் 26 அறிமுக நிகழ்வில் -21.09.2019

கலாநிதி க. சரவணபவனுக்கு T.D.D.A தலைவர் எஸ்.லக்ஸ்மணன் இதழை வழங்கி வைப்பதையும் கவிஞர் சம்பூர் எம்.வதனரூபன் ஆய்வுரை நிகழ்த்துவதையும் கவிஞர் தி.பவித்ரன் கருத்துரைப்பதையும் நிலாவெளியூர் கெஜதர்மா கவி வாசிப்பதையும் படங்களில் காணலாம்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ.எ.வா.வ.நிகழ்வு 20.10.2019

கவிதாயினி சிவரமணி தலைமையில் "மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்னும் தலைப்பில் நிகழ்ந்த கவியரங்கில் கலந்து கொண்ட கவிஞர்களான ரி.லலிதகோபன். மு.யாழவன். யூட்பேக்மன். த.சரண்யா. ந.நித்தியா ஆகியோரையும் 'சமகால நிலைமைகள்' தொடர்பில் ஆய்வாளர் யதீந்திரா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவல்ல நிஜம்

எட்டி அடி வைத்து
எங்கேயோ செல்கிறாய்
என்னால் எட்டிவர முடியாத
தொலை தூரம் நோக்கி
தட்டிப்பறித்துச் செல்லும்
நீ தந்த அன்பை
எட்டி பிடிக்க முடியலே
எனக்கு
கட்டுப்படாத மனசு இப்போ
கவலைக்குள் மூழ்குவதால்!

நெஞ்சேறி இருந்த
நினைவுகள்
தேங்கி இருக்க இடமின்றி
வெறுமையாகி அலைகிறது.
உதிரத்துள் நீ கலந்த
உயிரோட்டம் உணர்வுகளை
உசுப்பேற்ற முடியாமல்
உள்ளத்துள் மடிகிறது.
வெவ்வேறாய் நாம் பிரிந்த
வேற்றுமையின் துயரத்தால்!

சண்டை பிடித்து
சமாதானம் ஆன
நாட்கள் என்னை
பார்த்துச் சிரிக்கிறது
மனக் கடலில்
புதையுண்டு போகும் உன்
நினைவுகள்

வான வீதி எங்கும் - நீ
விதைத்த புன்னகை
வசந்த கால நினைவுகளை
தொட்டுச் செல்ல
ஐம்புலனும் அசைய மறுப்பதில்
ஒரு அர்த்தம் தெரிகிறது
நீ என்னை மறந்து போனது
கனவல்ல நிஜமென்று.

பி.ரீ.அஸீஸ் • கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடை பகர்வார் யாரோ?

"பரணியிலே
பிறந்து விட்டால்
தரணியையே ஆளலாமாம்"
பலபேரும்
பகருகின்றார்!

பரணியிலே
பிறந்தவன் நான்
பலனேதும் கண்டதில்லை!

குற்றுயிராய் துடிதுடித்து
குறைமாதப் பிரசவமாய்
குதித்து நான்
உதித்த போதே
தாயவளைப் பறிகொடுத்த
தயாளனும் நானானேன்!

போர் மேகம் புடைசூழ
பதுங்கு குழியினிலே
பதுங்கிட நாம் சென்றபோது
பையரவம் தீண்டிப்
பறிகொடுத்தேன்
தந்தையை நான்!

மனை ஆள
ஒருத்தியை நான் மணந்து...
மணம் பரப்ப
முயல்கையிலே
கர்ப்பப்பைக் கட்டி வந்து
அவளிறந்தாள்!

இத்தனையும்
நேர்ந்த பின்
இனியுமெப்போ
தரணி ஆள்வேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகதையோ வாழ்க்கை?
விடை ஏதும்
தெரியவில்லை!

திரு.ச. கணேசமூர்த்தி –
(சரவணன்)

◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉

## விடியலுண்டு விழித்திடு

சோகம் எதற்கு
சோர்வு உனக்கு
முயன்ற பின்னே
சொல்லு தோழா

கனவு எதற்கு
காட்சிப்படவே
விரக்தி எதற்கு
வியர்வை சிந்து

குறைகள் எதற்கு
நிவர்த்தி காண
நிறைந்த மனதாய்
நீயும் வாழ

வாழ்க்கை எதற்கு
வாழ்ந்திடத் தானே
முடியாதென்றால்
சிறக்குமா வாழ்வு

தயவு எதற்கு
காரியம் ஆகிடத்தானே
வீழ்ச்சி எதற்கு
உயர்ந்திடத்தானே

உணர்வு எதற்கு
உணர்ந்திடத்தானே
விளைந்திடும் காலம்
விழித்திடு விடியலுண்டு

– சியாமளா –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்காக ஒன்றிணைவோம்

நாட்டுக்காக ஒன்றிணைவோம்
நன்னெறியில் சென்றிடுவோம்
வீட்டுக்கு வீடு குரல் எழுப்புவோம்
சமாதானம் சமாதானம் என்றிடுவோம்!

ஔவை எழுதிய ஆத்தி சூடியை
அனுதினமும் நினைத்திடுவோம்
அறங்கள் பல ஆற்றிடுவோம்
நலங்கள் நாளும் பெற்றிடுவோம்!

மனிதனை மனிதனேயழிக்கும்
அஞ்ஞானம் மறந்திடுவோம்
மனிதனைப் புனிதனாக்கும்
மெய்ஞானம் அறிந்திடுவோம்!

மனித நேயம் வளர்ப்போம் - மண்ணில்
புனித செயல்களை விதைப்போம்
அநியாய அழிவுகளை மறப்போம்
இனிய வாழ்வை அமைப்போம்!

பொல்லாத எதுவும் வேண்டாமே - எமக்கு
நல்வாழ்வென்றும் வேண்டுமே
அல்லா, யேசு, புத்தன், காந்தி
எல்லோரும் அதையே வேண்டினரே...!

உடல்கள் சிதறாத உதிரம் சிந்தாத
அடிதடிகள் இல்லாத பழிபாவம் சொல்லாத
கடவுளை மறவாத மதபேதம் கொள்ளாத
அனாதைகளும், அவலங்களுமில்லாத
நாட்டுக்காக ஒன்றிணைவோம்...!

*திருமதி. தி. லோகேஸ்வரி,*
*அக்கரைப்பற்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்நீச்சல்

சும்மாய் இருந்தால்
சோறு கிடைக்காது
சோர்ந்து போனால்
எதிரி பலமாவான்

இம்மாநிலத்தின்
இயற்கை நியதியிது!
அம்மா என்று
அழும் பிள்ளைக்கே
அருந்தப் பால் கிடைக்கும்!

எதிர்த்துப் பார்
எதிர்த்துப் பேசு
எதிர்த்துக் கேள்!

நியாயம் நீதி
நெருங்கி வந்தால்
நெருப்புக் கூட
எரிய மறுக்கும்

கருத்துச் சுதந்திரம்
உனக்கும் உண்டு
கதைக்கா விட்டால்
வதைப்பர் கொடியவர்!

கதைக்கப் பார்
உதைக்க நேர்ந்தாலும்
கதைக்கப் பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளிலே
உலகமே சங்கமம்
கதைகளில் தான்
உயிர்களும் சமத்துவம்

கருத்து மோதல்
கட்டாயம் தேவை
நெருக்கும் கொடுமை
நிச்சயம் விலகும்!

முயன்று முயன்று
முடியா விட்டாலும்
முயற்சி செய்வதை
முடித்துக் கொள்ளாதே!

போட்டி பொறாமை
அவமதிப்பு தட்டிக்கழிப்பு
உன்னை மட்டுமா
எதிர்க்கிறது?
உலகத் தலைவர்களையே
ஏளனப்படுத்தியவையல்லவா?

விட்டுக்கொடுத்தால்
கெட்டுப் போவாய்
பட்டுத் தெளிவதே
உண்மை அறிவு
பணிந்து போனாலும்
பயந்து வாழாதே
துணிந்து நில்
வெற்றி பெறுவாய்!

- செ.ஞானராசா -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயில்களம்

# இளைஞனே

சமூகவலைத்தளங்களில் சிக்கி
உன் வாழ்வை இழக்காதே
சோம்பியிருந்து அடுத்தவர்க்கு
சுமையாய் இருக்காதே

அந்நிய கலாசாரம்
ஆடை அணிகலன்களில்
மயங்கிக் கிடந்து
மானத்தைத் தொலைக்காதே

உனது நாடு
உனது மொழி
உனது பண்பாடு
உனது சூழல்
பாதுகாத்திட மறக்காதே

சாதிமத பேதம்
ஆதிக்க அடக்குமுறை பேணும்
பாதிமனிதரை
தூக்கியெறியத் தயங்காதே

மதிகெட்ட மனிதரால்
மிதிபட்டுக் கிடக்கும்
மாநிலம் பயனுற
வல்லமை கொள்வாயே

~நந்தீஸ்வரன் நித்தியா~

கவிதை சம்பந்தமான குறிப்புக்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களோடு மொழி பெயர்ப்புக் கவிதைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள் படைப்பை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

அறிமுகக் குறிப்பில் உங்களது கவிதை தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயில்களம்

# பிரியாவிடை......!!!

ஓராண்டு பழகினோம்
திகதி நினைவில்லை....
நேரம் பார்க்கவில்லை
சிரித்து பேசிய நிமிடங்கள் மட்டும்
திரவாய் வந்து போக
சோகமான நேரங்கள் கூட
சுகமாய் கடந்து போக
நம் பேரில் திசைகளை எழுது!!
பாடவேளை மறந்து,
மரத்தடியில் அமர்ந்து,
கைகோர்த்துப் தோன்றியதைப் பேசி
உலாவித்திரிந்து
உள்ளமதில் உள்ள எண்ணமதை
வெளிப்படுத்தி
பசி வந்தால் கூட்டணி போட்டு
உணவுக்கு அடிபட்டு
பகிர்ந்துண்டு...
பரீட்சை நேரம் பாகுபாடின்றி
அறிவைப் பகிர்ந்து,
கேலியும் கிண்டலுமாய்
ஆசானோடு இணைந்து
வடிவேல் நகைச்சுவை ரசித்து
விளையாட்டென வந்தால்
வீர சாகசம் புரிந்து
விழாக்கள் என வந்தால்
முன்நின்று பல
முதலாளி வேலைகள் செய்த
நம் நட்பின் பயணம் மாறுமா?
ஆயுட்காலம் தேய்ந்தாலும் நம்
நண்பன் முகம் தான் மறந்திடுமா??

– திருமலையாள் –

புனைபெயரில் எழுதுவோர் தமது சொந்தப்பெயர் முகவரியினையும் குறிப்பிடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Pint – sized publication from Trinco

By - K.S.Sivakumaran



An enthusiastic literary man from Yaalpaanam now living in Thirukona malai has encour aged poets writing in Tamil has continuously published a small booklet for the last ten years and produced 26 issues. In the July – August issue. I found some poems that could be introduced to the English speaking readers. This once in two months book is titled Neengalum Eluthalaam (Even You Can Write).

Priced at.R.60, it has as its motto: Thadaikalaith Thakarthu Thavukalaith Thedi (Breaking the Blocks – Searching for the Suitable. Its editor is SR Thanabalasingam. Address" 43/4, Chanel Lane, Trincomalee. Telephone: 0778812912. I really don't know what his profession is; maybe he is a teacher.

I noticed that though it calls itself as a PoetryMagazine, it combines both poems and prose. Most of the poems are either politically based account of contemporary happenings that affect the common people, particularly the Tamil speaking people. In other words, they are reporting what they undergo and plead for help from others of like minded people.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Let me first let you know what the prose says and then give some idea of the content of the poems, most of which are prose – like.

Reporting literary events and including encouraging capsule reviews are in prose. The editorial complained the now bygone chaorialcomplained the now bygone chaotic political situation in respect to the agony of the Tamil people in the north and east. Then there is a report of the launching of an essay book by Rani Seetharan and the felicitation of Shellydasan, a poet, plus photographs of the events. This is followed by the Full moon Day discussion and poetry recitation of what the Tamil people expect in the current political situation. And a photograph and report of the celebration of remembering the October Revolution in Russia.

The editor mentions the contribution of Thimbu Siva and the greetingsto Anthony Jeeva reaching 75 years.
Inspired by the writing of Saba Jayarasa, Periya Iyngaran writes about Anemic Writing. An excerpt from Kalaivathi Kalleel's appreciation of the journal is also published. Then there is an obituary note on the demise of Nachikudah MS Shaki and an introduction of a poetry book by Ariyalaiyoor Mishanthi Selvarasa a letter to the editor by Mullah Verakuddy is also published.

The purpose in mentioning these reports and activities taking place in and around Trincomalee briefly in such a 38-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

page pint – size little magazine is to tell the non – Tamil readers that activities in literary matters matter, which does not appear in the mainstream, which media. As for Poetry, two translations of poems are published. One is by the late Filipino poet named Amadov V Hernandez, translates by S. Sivasegeram; both the English and Tamil versions are published side by side. Another poem is by the 19th – century poet by name John James Ingalls by N.Sathyabalan

Without mentioning the quality of the politically oriented poems by the local poets I merely give their names, again so that readers not knowing Tamil will also know such writers are also living in this country.

Their names : K Yoganandan, K Thavabalan, AS Fathima, Nilaveli Keja – Tharma, KR Thiruthuvarajah, RS Aananthan, Mullai Veerakkuddy, soosi Edward, Pavel, S Kaneshamoorthy (Saravanan), Aeravoor Thahir, Neela Balan, M.Yalavan P.Pathmaprashan, V.Kunapele, Mullai Veerakuddi and SR Thanabalasingam.

In short, in Thirukonmalai too Tamil literary events and activities are taking place.

09.10.2019 – Daily News (Wed)

ஆக்கபூர்வமான விமர்சனங்கள்,

கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசந்தெழும் உண்மைகள்

"செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு"
அப்பா அடிக்கடி சொல்லும் பழமொழி
தப்பேயில்லை.... அம்மாவு மிப்படி
எப்பொழுதாவது தத்துவம் பேசுவார்....!

"நிழலின் அருமை நீண்ட வெயிலில்
உழன்றால் தெரியும்..."என்பார் அம்மா...
அதுவும் சரியே..."

ஐம்பதாண்டின் முன்னாலெனக்கு
அழகாயிவைகள் புரியவேயில்லை
இப்பொழுதென்றால் இதுவும்...பிறவும்...
இன்னும் பலவும் புரியத் தொடங்கின...!

அசோகனென்னும் பேரர சொருத்தன்
சிதைத்தவை கலிங்கச்
சிறுமண் குடிசைகள்....?
சீறியெழுந்த கலிங்கத்தின் சீற்றம்
சில தினங்களுக்கே தாக்குப் பிடித்தது....!

கலிங்கம் வீழ்ந்ததோ
நாற்பத்தோர் நாட்கள்....
தனித்தே நின்ற சிறுகுழு....இவர்கள்....
நீண்ட நாட்கள்
பல் முனைக் களங்களைத்
தாக்குப் பிடித்துத் துவம்சம் செய்தனர்....!

இமயம் எதிர்த்தால் எறும்புகளாலே
எத்தனை காலம் தாக்குப் பிடிக்கலாம்....?
சமயம் வாய்த்தால் சக்கடத்தானும்
சண்டியனென்பது சான்றோர் வாக்கு....!

முடிவுரை எழுதப்பட்டதால்
கலிங்கத்தின் ஆட்சி
ஓய்ந்தது சமருடன் .....!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சமரின் இடையிற் சிக்கிய
பன்னூறாயிரம் பூச்சி புழுக்கள்
வெந்தேயழிந்ததும்...
வரலாறொன்றைச் சொந்தமாக்கித்
தனிப்பெரும் நீதிச் சிந்தனை
ஒன்றைத் தரணியில் நட்டதும்....
.... என்பவை கசப்பில்
தோய்ந் தெழும் உண்மைகள்....!

- முல்லைவீரக்குட்டி -

※※※※※※※※※※※※※※※※※※※※

## எங்கோ ஒரு புதிய ஆரம்பம்

பிரிவு
பிறக்கும் போதே அது
நம்முடன் சேர்ந்தே
பிறந்து விடுகிறது

சந்ததிகள் ஒவ்வொன்றாய்
பிரிந்து பிரிந்து
புதிய சந்ததிக்குள் நாம்
நாளை நாமே
பழைய சந்ததியாய் ஆகும்
பரிணாம வளர்ச்சி!

கோடை வசந்தம்
மாரி மழை பனி குளிர்
காலங்களின் பிரிவுகள்
வருடங்களின் மலர்வுகளாய்
பிரிவுகளாய்!

மாற்றங்கள் ஒன்றே
மாறாதது
பிரிவுகளின் மறுவாசிப்பாய்
அது!
தவழும் பருவம் நகர்ந்தாலே
நடக்கும் பருவம்
நடக்கும் பருவம் நகர்ந்தாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி ஆடும் பருவங்கள்
பள்ளிப் பருவத்தின் பிரிவுகளை
பார்க்காத தலைமுறையா?

வாலிபத்துள் நுழைந்த
வாழ்க்கைச் சுகங்கள்
நடுநிசிச் சூரியனாய்
மெல்லமெல்ல
மேற்கை நோக்கி!

வைகறைச் சூரியன்
கிழக்கைப் பிரிந்து
மேற்கில் அந்திச் சூரியனாகி
முதுமைக்குள் நுழைந்த
உடலைவிட்டு
உயிரின் பிரிவு
வாழ்க்கை வட்டத்துக்கு
முற்றுப்புள்ளியிட எங்கோ ஒரு
புதிய ஆரம்பம்
மீண்டும் பிரிதல்களுக்காய்!

**-ஷைஷ்விதாசன்-**

****************************

## நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின்
## ஆழ்ந்த அஞ்சலிகள்

- 30.07.2019 இயற்கையெய்திய சித்திரக் கலைஞர் அமரர் அருளானந்தம் அருள்பாஸ்கரன் (ஆசிரியர் தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி)

- 10.12.2019 அன்று காலமான சமூக ஆர்வலர் வி.முனீஸ்வரன் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர், நீ.எ.வாசகர் வட்ட உறுப்பினர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கப் புள்ளிகள்

புள்ளியில் தொடங்கி
ஏதோவோர் புள்ளியில்
முடியும் வாழ்வு

இனம் மொழி நிலம் மதம்
நான் நீ எனது உனது
என விரிந்து செல்லும்
புள்ளிகளில்

புள்ளிகள் தொலைதலும்
புள்ளிகள் அழிதலும்
புள்ளிகள் கரைதலுமாய்

ஒவ்வோர் படி நகர்விலும்
புள்ளிகளைப் புள்ளிகளே
அழிக்கும் வைரசுகளாய்

தன் வீட்டுக்கதவைத்
தட்டாதவரை
ஒதுங்கியிருந்து ஒத்தோடிகளாய்

அற்ப சந்தோசங்களில்
அகம் மலர்ந்து
அடிமுடி தேடியவர்களாய்

வெல்வோம்
வென்று தருவோம் என
புறப்பட்டவர்களே
தொடக்கப்புள்ளியை
மறந்தவர்களாக

இல்லாத வரைபுகளை
உள்ளதாக உரைத்தலும்
வீட்டுப்பாடம் செய்யக்
கள்ளப்படுதலும்
இலக்கற்ற பயணங்களின்
காலம் கடத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இழப்புக்களும்*
*இழப்புக்கள் மீதான வலிகளும்*
*இன்னும் இன்னும் நீள....*

*விடையில்லாத ஓர் ஏக்கப்*
*பெருந்துயரப் புள்ளியில்*
*முடிந்து போகும் வாழ்வு*

**– எஸ்.ஆர்.தனபாலசிங்கம் –**

******************

## தமிழ்ச்சங்கம்

சிங்கத் தமிழர்கள்
தங்கத் தமிழைக் கட்டிக் காத்திட,
சங்கம் அமைத்திட்டார் – தமிழ்ச்
சங்கம் அமைத்திட்டார்.

முதலாம் தமிழ்ச்சங்கம்
குமரிக்கண்டத்தின்
பழம் பாண்டி நாட்டிலே,
தென் மதுரையிலே அமைந்தது.

தென்மதுரை மாநகரை
கடல் கொண்டு போன பின்னே,
இரண்டாம் தமிழ்ச்சங்கம்,
அமைந்தது கபாடபுரத்திலே.

கபாடபுரத்தையும்
கடல்கொண்டு போன பின்னே
மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைந்தது
இன்றைய மதுரையிலே

களப்பிரர் ஆட்சிக்காலத்தில்
குரங்கின் கைக் பூமாலைபோல
மூன்றாம் தமிழ்ச்சங்கமும்
முற்றாக அழிந்து போனது.

**கலைமாமணி.கா.தவபாலன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தில் சிறுவர் இலக்கியம் (ஆய்வு)



கேணிப்பித்தன் ச.அருளானந்தத்தின் 'ஈழத்தில் சிறுவர் இலக்கியம்' சமூகக் கற்கை நிலைய ஏற்பாட்டில் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிலையத் தலைவர் ஒ.குலேந்திரன் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்விற்கு கௌரவ பா.உ.க.துரைரெட்ணசிங்கம் பிரதம அதிதியாகவும் முன்னாள் கி.மா.கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். கவிஞர் க. யோகானந்தனின் நயவுரையும். வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாருதம் சஞ்சிகை அறிமுகமும், தமிழ்ச்சங்கத்தின் ஜனாப் அனஸ் கௌரவிப்பும், ஞானம் ஆசிரியர் தி.ஞானசேகரனின் சிறப்புரையும் இடம்பெற்றது.

---



## திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்

விபரத்திரட்டு - 2009

Media Directory

அரசரெத்தினம் அச்சுதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட 2019 தி.மா.ஊ சங்கம் அதன் 15ம் ஆண்டின் நிறைவாக மாவட்ட ஊடகவியலாளர் அடங்கிய பயனுள்ள விபரத்திரட்டு நூலினை வெளியிட்டுள்ளது.

---



## கிடைக்கப்பெற்றோம்

### சஞ்சிகை - பெண்

'தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய் உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்' என்ற மகுட வாசகத்துடன் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் 'பெண்' சஞ்சிகை தொகுதி 24 கிடைக்கப்பெற்றோம். விஜயலட்சுமி சேகரை ஆசிரியையாகக் கொண்ட இச் சஞ்சிகை பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவித்து அவர்களது பிரச்சினைகளை வெளிக் கொணர்கிறது. பாராட்டுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் பெயர்ப்பும்


# REFLECTING ON HEADACHES

Roque Dalton Garcia
(14 May 1935 to May 1975)

IT IS BEAUTIFUL to be a communist,
but it causes many headaches.
The headache of the communist
is of a historic nature, that is to say
it does not yield with the help of
Painkilling tablets
but only with the relaization of
Paradise on earth.
That's the thing.

under capitalism we have a
headache
and they tear our heads off.
In the struggle for the revolution the
mind can act as a delay.
Under socialist construction, we plan
the headaches
Which does not make them scarce,
quite the opposite.
Communism will, among other things,
Be an aspirin the size of the sun.

(Roque Dalton, Salvadorian Poet,
Internationalist and Revolutionary,
was assassinated on May 10, 1975)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவலிகள் பற்றிச் சிந்தித்தல்

றோக் டால்றறன் கார்ஸியா
(14 மே 1935 – 10 மே 1975)

ஒரு கம்யூனிஸ்ட்டாயிருத்தல் அழகானது.
ஆனால் அது பல தலைவலிகளை ஆக்கும்.
ஒரு கம்யூனிஸ்ட்டின் தலைவலி
வரலாற்றுப் பண்புடையது, அதாவது
அது உடாதைக் கொல்லி மாத்திரைகட்குப்
பணியாது.
மண்ணில் சொர்க்கத்தை நிறுவிய பின்
பணியும் அதுதான் விடயம்.
முதலாளியத்தின் கீழ் நமக்குத்
தலைவலியுண்டு.
அது நமது தலைகளைப் பிய்த்துவிடும்.
புரட்சிக்கான போராட்டத்தில் மனம் அதைச்
சுணக்க இயலும்.
சோஷலிச நிர்மாணத்தின் கீழ் நாம்
தலைவலிகளைத் திட்டமிடுகிறோம்.
அதனால் அவை அரிதாகா
அதற்கு நேரெதிராகும்.
கம்யூனிசம், பிறவிடயாங்கட்கிடையே,
சூரியனளவான ஒரு அஸ்பிரின்
மாத்திரையாகும்.

(எல் ஸல்வடோர் கவிஞரும் சர்வதேசவாதியும் புரட்சியாளருமான றோக் டால்றறன்மே 10, 1975 அன்று கொலையுண்டார்)

சி.சிவசேகரம்

வங்கி மூலம் வருட சந்தா செலுத்த விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு 450/= செலுத்திப் பற்றுச் சீட்டினை அனுப்பி வைக்கவும்.

**R.Thanabalasingam**
**A/C No.106653402077**
**Sa-mpath Bank**
**Trincomalee.**

ISSN 1800-3311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org